உ

கடவுள் துணை.

# குடியர் ஆனந்தப்பதமும்

## கெஞ்சாவின் ஆனந்தக் களிப்பும்,

## புகலையின்வெண்பாவும்அடங்கியிருக்கின்றன.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமைந்து

மதராஸ், என். ஸி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். ஸி.

143

# விளம்பரம்.

## மணிமந்திர வயித்திய சேகரம்.

இந்நூலை சகலஜெனங்களும் சுலபமாய்

தெரிந்துக்கொள்ளலாம்.

சோதிடம், மாந்திரீகம், வைத்தியம் கற்றுணர்ந்த வல்லவர்களும், இனிகற்றுணர விருப்பமுள்ளவர்களும், கண்ணுற் கண்டுக் களித்து ஆனந்தமடையும் பொருட்டாய், மணி, யென்னும், சோதிடமும், மாந்திரீகமும், வைத்தியமும், இம்மூன்றும், பற்பலநூற்களைக்கொண்டு ஆராய்ந்து புதைநிதியம்போல் நன்றாகச் சேர்த்து தாங்கள் தாங்களே, தெரிந்துக் கொள்ளும்படியாய் வசனகாவியமாய் எழுதி, அரிச்சுவடிபோல ஒவ்வொன்றையும் தனிபிரித்து வெகுநேர்த்தியாய் அச்சிட்டிருக்கின்றது.

இதில்மாந்திரீகம் ஆரூடத்திற்கும் ஆங்காங்கு, லெத்தகிராய் சக்கரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

நல்ல கிளேஸ்கடிதத்தில் பதிப்பிக்கப்பட்டது புல்கவிக்கோ பயிண்டு செய்தது.

இதன்விலை ரூபா-1.

கடவுள் துணை.

# குடியர்கள்பேரில்,

# ஆனந்தப்பதம்.

---

## கலிவிருத்தம்.

### காப்பு.

அத்திமுகவனே பத்தியுடனேயான்
நித்தியமனதில் வைத்துவணங்கினேன்.

### குடியர் துதி விருத்தம்.

விடியாலெழுந்து திடியாய்நடந்து
படியாலளந்து குடியாதிருந்தால்
வெடியாதுவென்று துதியாகசொன்னேன்
மடியாதவெங்கள் கணநாதனே.

### ஆனந்தப்பதம்.

என்னஆனந்தம்பார் இந்தக்கள்
என்னென்ன ஆனந்தம்பார்

மன்னர்புகழ்திரு சென்னைநகர்தனில்
நன்னயமாஞ்செங்கான் கடைத்தெருவினில்
சொன்னமொழிதவறாமல் நடக்கின்ற
வுன்னிதமாம்நயினியப்பன்கடைக்கள்ளு என்

அண்டரண்டபகிரண்டமுங்காணுது
    மண்டலமெங்குஞ் சுழன்றிடத்தோணுது
கண்கண்டகடையில் காண்கிடச்செய்யுது
    காசினிதன்னிலே பேசிடச்செய்யுது என்

பட்டஞ்சுசோமனைக் கட்டவும்செய்யுது
    பாரில்மன்னவர்க்கு விற்கவுஞ்செய்யுது
சண்டைக்குவாரம்பந் தான்மிகச்செய்யுது
    தாடையில்ரண்டறை வாங்கவுஞ்செய்யுது என்

காதுக்கடுக்கனை விற்கவுஞ்செய்யுது
    கண்டவருக்கெல்லாம் வார்க்கவுஞ்செய்யுது
காரியமாய்க்கள்ளைக் குடித்திடச்செய்யுது
    கண்டவர்காலா லுதைபடச்செய்யுது என்

காற்பணங்கள்ளைக் குடித்திடச்செய்யுது
    கையில்கறிதோசை வாங்கிடச்செய்யுது
ஐயமில்லாமலே யுட்கொள்ளச்செய்யுது
    ஆனந்தமாய்ப்பாட்டை பாடச்செய்யுது என்

கன்னங்களவுகள் செய்திடச்செய்யுது
    கள்ளுக்கடையெச்சைக் குடுவையைத்தேடுது
கண்டபேர்களைப் பழிக்கவுஞ்செய்யுது
    மண்டைமுறிய வடிபடச்செய்யுது என்

தித்திப்புக்கள்ளு தினமும்புளித்தகள்ளு
    மெத்தக்குடித்தால் பித்தந்தலைக்கேறி

சுற்றிசுற்றித்தலையைச் சுழட்டியடிக்குது
தத்துவஞானஞ் சகலமுங்காட்டுது என்

கழுத்துத்தாலியை யறுக்கச்செய்யுது
காசிக்கடைதனில் விற்கவுஞ்செய்யுது
கண்டசேவகர்கையில் பிடிபடச்செய்யுது
கன்னத்திலடிகள் படவுஞ்செய்யுது என்

குட்டிக்கரணங்கள் போடவுஞ்செய்யுது
கும்பலாய்மன்னரைக் கூட்டவுஞ்செய்யுது
ஓட்டமாய்சேவகர் வந்துபிடித்தாக்கால்
ஒதுங்கியடங்கி யொடுங்கிக்கிடக்குது என்

பாராளுமன்னரைப் பார்த்திடச்செய்யுது
பங்கப்பட்டபின்பு அங்கமும்வாடுது
தாராளமாய்பராதம் இரண்டுரூபாய்
தானேகொடுத்திடத் தள்ளியேபோகுது என்

வள்ளலெனுந்துரை ஞாயத்தைக்கேட்டிட
கள்ளைக்குடித்த கசடர்க்குத்தானப்போ
உள்ளபடிசத்தியஞ் சேவகர்செய்திட
உள்ளங்கலங்கியே துள்ளித்துடிக்குது என்

போட்டவபராதம் ரூபாய்கொடுத்திட [டால்
பொருளொன்றுங்கையில் வகையில்லாமல் விட்
வாட்டமாய்மண்ணை யெடுத்திடச்செய்யுது
மண்வெட்டியைக்கையில் வாங்கவும்செய்யுது எ

கம்பளிமுக்காடு போடவுஞ்செய்யுது
காலில்விலங்கையு மாட்டிடச்செய்யுது
பம்பரம்போலமண் ணெடுத்திடச்செய்யுது
பத்துநாளும்போனால் விட்டிடச்செய்யுது என்
என்னஆனந்தம்பார் இந்தக்கள்
என்னென்ன யானந்தம்பார்
குடியர் ஆனந்தப்பதம் முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

## கெஞ்சாவின்

# ஆனந்தக் களிப்பு.

இதுவேயானந்தங் கைலாசம் இதற்
கிணையில்லையேயிந்த ஜெகத்தினில்மோசம்

சீரானகெஞ்சாவைவாங்கி யொரு
சிலும்பிதனிலதைச் சிறப்புடன்வைத்து
பாராமலொருதம்மிழுத்தால் அப்போ
பரமபதத்தினைப் பார்க்கலாம்நாமே இது

இலைகாம்பு விரைதள்ளவேணும் இதுக்
கெதிரானபிர்மபத்திரி யிலைபோடவேணும்

சிவகங்கை மூன்றுதுளிவிட்டு அதை
சிக்கெனவுண்டையாய்ச் சிலும்பிலடைத்து

அக்கினிபகவானை மூட்டி எங்கள்
ஆத்தாள்சிவகாமி யம்மனைநினைத்து

திக்கென்றுஒருமூச் சிழுத்தால் அப்போ
தேவர்களெல்லோருந் திறமுடன்வந்து

எவ்வரம்வேணுமென்று கேட்டார் எனக்
கெதிராளியில்லாமல் யிருக்கவேகேட்பேன்

இதுவேயானந்தங் கைலாசம் இதற்
கிணையில்லையேயிந்த ஜெகத்தினில்மோசம்

---

உ

கடவுள்துணை,

# புகையிலையின் வெண்பா.

கண்புகையும்நெஞ்சுணருங் கைகாலசைந்துவரும்
வெண்புகையல்மேனி வெளுக்குமே—பண்பாய்கேள்
ஈரல்கருகிவரும் இந்திரியம்நஷ்டமாம்
பாழும்புகையிலையின் பண்பு.

சிவமயம்.

என்னவேடிக்கைப்பார் இப்பதங்கள்
என்னென்ன வேடிக்கைப்பார்.

வீசும்புகழ்திரு வொற்றியூருச்சவம்
வேடிக்கைபார்க்க வீரபத்திரன்றானும்
ஆவலுடன்வரும் வழியில்தன்னிலே
அன்புடன்யானுமே யிப்பதம்பாடினேன் என்

வரும்வழி தன்னிலே வம்பர்குடியர்கள்
வார்த்தைகளைக்கேட்டு நேத்திபதாகவே
இரமுடன்யானுஞ் செய்தனனிப்பதம்
தீர்க்கமாயெல்லோரும் பார்த்துமகிழவே என்

உத்தமனிரங்க சாமியெனுமுதலி
ஒருபதம்பாடென்று இனிமையாய்க்கேட்கவே
மெத்தமகிழ்ச்சியாய்ப் புல்லறிவாயனும்
மேதினிதனிலிந்தப் பதங்களைப்பாடினேன் என்

இலக்கணவிலக்கிய மின்பமாய்க்கற்றோர்கள்
இன்னமபெரியோர்க ளெல்லவரும்பார்த்து
என்னபிழைக ளிருந்தாலுமென்றனை
ஏற்றுக்கொள்ளவேணுந்தாழ்மையுடன்சொன்னேன்.

என்னவேடிக்கைப்பார் இப்பதங்கள்
என்னென்ன வேடிக்கைப்பார்.

குடியர் ஆனந்தப்பதம் முற்றுப்பெற்றது.

குழவியாமங்கத்தை மின்னாக்கியாட்கொண்ட
குமரனே மயிற்றுறகனே
குலவானமறைஞான நலமான துறமோன
குலனான போரிமனனே. (7)

படுபுலனெனப் பெயர்கொள் பஞ்சமுழைவாயக்க ராம்பற்றனு னுட்சுக்கியே, பாழாகியறிவுகனி யலைசுரு ண்டேங்கிவருபார்மடந்தைக்கொராடை, யுடுபிறவியா ழியிற் பட்டுமிக்கிரு வினையெனுந் திரையின் மோதுண் டுமே, யோயாமலிரவுபக னன்வருந்தாநிற்க வுற்றவிச்ச மயத்திலே, கடுமிடறன்மைந்தனே நினதுதாட்புணைத னைக் கருத்துன்னி யுதவாவிடிற், காசினியி லெளியனே ன்பிழைப்பதுண்டோ சொலாய் காசிபன்றந்தமைந்தன் கொடுமையுறுசூரர் றடிந்ததொரு கீர்த்திபெருகுறிஞ் சியகலாத குருவே, குலவானமறைஞான நலமானதுறு மோன குலனான போரிமனனே (8)

தடக்குவடுடற்றுகள் படக்கடியமரனே தகர்ப்பரி செலுத்திஞேனே, தாவில்புகழாற்புயா மொழிக்கவிப் பாவதைத் தாழ்ந்ததா வுட்கொண்டுநன், மடவநடைப யிலெயிற் றியர்கள்வாழ்சுரத்திளை வண்மைமலர் வாய் திறந்து, வானத்திலிருந்துவீழ் திவலைசுடர்சுடுமென்று மயக்குற்றதாப் பாடிஞெய், விடமுண்ட குறிகண்டவி ருள்கண்ட மறிகொண்டே விரல்கொண்ட வங்கைகொ ன்கொன்ற பணிகின்ற முதுகுன்ற மனுமன்

றன்மிகுவீரன் மூரலற்ற குடதிசைக்கெஞ்ஞான்றுவோ டரிப்பகைவனைக் கொன்றசற் :குமரவேளே, குலவான மறைஞானநலமான துறுமோன குலஞனம்பாரிமனனே.

மண்டுபுகழ்கொண்டதோ ரெண்டாகப்பொன்னுண்ட மாண்மைபெறு முலகதனிலே, வானவர்கண்மன்னியகம்மகிழ்ச்சியொ டமர்ந்துய்ய வஞ்சரையநாளிற்செற்ற, கண்டுமொழிகெண்டைவிழி கொண்டுநிலவுசெண்டு முலைக் கன்னியர்கண்மாய்கையுற்றுக், கருந்திரைப்புரளுநீ ராழியுடு தரைதனிற் கருத்தழிந் தழுங்குறாஉந், தொண்டனுமளியினங் கிண்டமுகை விண்டுநனை தூய்மைபெறு நறவமார்செய், சூழுமாரூரினிற்சுந்தரர்காவிரது தூதுசென் மாதிடத்தர், கொண்டதொருகுமரனும் வடிவேலெனபிதான கொண்டோனே யெனையாளுவாய் குலவான மறைஞான நலமான துறுமோன குலஞன போரிமனனே, (௰)

வாழ்க வேதியர் வையத் தரசனும்
வாழ்க வானவர் மாரியு மோங்குக
சூழ்க சைவத் துறையினி லுள்ளவர்
ஆழ்க குகன்மல ரனைவர்க ணெஞ்சுமே.

திருப்போரூர் முருகக்கடவுள் பதிகம்

முற்றிற்று.

---

உ

கடவுள் துணை.

# நாத்தனார் வாயாடியென்று வழங்கும்
## திருமணக்கண்காட்சி ஓடமென்னும்,
# கலியாண ஏசல்.

---

(மாப்பிள்ளையை மைத்துனமார் ஏசுதல்)

ஏலேலோ தத்தையா ஏலலிலோ
ஏலேலோ ஏலலிலோ.

தேசாதிதேசமெங்கும் தாய்தந்தை தேடிவந்த மாப்பிள்ளையை மோசமாக அழைத்துவந்து வெகுபரிந்து மிக வார்த்தைசொல்லி (சனார்) அத்தானை அத்தானை ஓய் அத்தானைகேளும் அழகுசபைதனிலுள்ள ஆனவருங்கேளுங்கள் தேவாரஞ்சொல்லென்றால் தாவாரம்போவார் தேவடியாள்வீடென்றால் காவலாயிருப்பார் ஆனைமேலேரென்றால் பானைமேலேறுவார் ஆத்துக்குப் போவென்றால் ஊத்துக்குப்போவார் மாடிமேலேரென்றால் காடிமேலேருவார் மச்சுக்குள் நுழையென்றால் குச்சுக்குள் நுழைவார் கச்சேரிபோவென்றால் புதுச்சேரிபோவார் கணக்குகளை பாரென்றால் பிணக்காகப்போவார் அண்டையிலேவாருமென்றால்சண்டையிலேபோவார் ஆடுகளைப்பாரென்றால் மாடுகளைமேய்ப்பார் இப்படிசமர்த்துள்ளமாப்பிள்ளையைத்தேடி யிருந்தாரே உன் தந்தை யென்மேனாடி போஜனக்காரர் புகழ்கெட்டிக்காரர் ஒருபரிக்கை குறைந்தாலே எழுந்திருக்கமாட்டார் ஏலேலோ.

(நாத்திமார் பெண்ணைப்பழித்தல் ஓடம்)

மங்கையரே உனக்கேற்ற வாய்த்ததினால் உங்கள்முன்னோர்கள் செய்தவந்தான் உந்தனுக்குக் கிடைத்ததினால் அங்கமெல்லாம் மினுமினுப்பும்ரொம்ப அழகுகளுமுண்டாச்சு சங்கையுட னிருந்ததுபோ யிப்போ சரியிருக்க சபையிலாச்சு (முடுகு) நல்லதோரெண்ணையைக்காணாத திரேகம் நகமுள்ளசம்பங்கிலைதலங்களனேகம் இலுப்பைப்பூபொருக்கித் திரிந்ததும்போச்சு இப்போது தெருவாசல் வ ராமலாச்சு மந்தைமாட்டின்பின் திரிந்ததும்போச்சு மாறுமல்பத்துப்பெண் கூட்டுறவுமாச்சு சிப்பிகளும் வராட்டிகளும் விற்றதும்போச்சு சொகுசான அன்ன நடை கைவீச்சுமாச்சு ராப்பட்டினி ரொம்பவுங் கிடந்ததும்போச்சு நால்வகைக்கறியுட னுண்டிடவுமாச்சு தீபாவளியெண்ணைக் கண்டதும்போச்சு தினம்தினம் மினுக்கெண்ணை திரேகத்திலாச்சு அங்காடிதூக்கியே அலைந்ததும்போச்சு அதிகாரம்நால்வகை செய்திடவுமாச்சுஓயாமற்சனிகளைச் சிந்தினதும்போச்சு ஒழுகின்ற மூக்குக்குத்துபுலாக்காச்சு கருமேகம்போலவே யிருந்ததும்போச்சு கணவனைக்கண்டவுடன் கனத்தசிகப்பாச்சு கந்தைகளைப்போற்றிய காலமும்போச்சு காணாதபட்டுகளுடுத்திடவுமாச்சு மண்ணாலே நகைபண்ணி பூண்டதும்போச்சு மணவாளன்வந்தபின் பொன்பணிகளாச்சு பொல்லாதநீலியென்று புகன்றதுவும்போச்சு புருஷனைக்கண்டவுடன் பொறுமைமிகவாச்சு சாணிகளைத்தட்டின கால

மும்போச்சு சந்தணமெடுத்தினி சரிபூசலாச்சு புண்ணு க்குநின்றதோ ரங்நாளும்போச்சு புகழ்லட்டு மிட்டாயி புசித்திடவுமாச்சு கஞ்சிகளைக்காய்ச்சியே குடித்ததும் போச்சு கனத்தமுள்ளகறிகளை வுண்டிடவுமாச்சு வலிய நெற்குத்திய களிகாலம்போச்சு வகையான பூச்செண்டு வாங்கிடவுமாச்சு வெய்யலிலுங் கானலிலு மலேந்ததும் போச்சு வெளியெட்டிப்பாராமல் உள்நிற்கலாச்சு உளு த்ததோர் கேழ்வரகை தின்னதும்போச்சு ஓயாமல்தா பூலந்தின்றிடவுமாச்சு பீற்றப்பாய்தன்னிலே புரண்டது வும்போச்சு பேரானகட்டிலில் துயில்கொள்ளலாச்சு இத் தனையும்வந்தது யாராலேபெண்ணே எண்ணிநீபார்த்தா யோ எங்களுடையண்ணன் புருஷனால் வந்ததோர் இப் பெரியவாழ்வு போகாதுஇனிமேலேவாராதுதாழ்வு தக ப்பனார்செய்ததோர்தவமுயற்சியாலேதகுந்தமாப்பிள்ளை வாய்த்தார் அறிவாயினிமேலே ஏலேலோ ஏலிலேலோ.

(சம்மந்தியைப் பழித்தல்)

காக்கை கருத்திருக்கும் கோவிந்தா கடல்தண்ணீ ருப் புரைக்கும் காத்தடித்தால் மரமசையும் கோவிந்தா கல் லெறிந்தால் சம்மந்திக்கு பல்லுடையும் (சரூர்) ஆங்கார சிங்கார வாகனமூளி அத்தையும்பாட்டியும் அடங்கலும் மூளி ஆத்துக்கு வந்ததோர் நாட்டுப்பெண் மூளி அரிசி அரைத்துவைத்த குடக்கல்லுமூளி எடுத்துக் கரைத்து வைத்த கல்சட்டிமூளி சூடுகொடுத்ததோர் தோசைக்க ல்மூளி வாங்கிவைத்தவொரு மரத்தட்டுமூளி சாப்பிட

வந்ததோர்சம்மந்திமுளி பிள்ளையுஞ்சம்மந்தி பெண்சாதி மூளி கண்ணுகலே சாப்பிடுவாள் கோதும்பை போனி மனையிலிருக்கின்ற பெண்பத்திரகாளி ஏலேலோ.

(சபையில் மாப்பிள்ளையின் குணத்தைப் புகழ்தல்.)

இப்பெரிய சபைதனிலேவந்து இருக்குமந்த யாவர்களும்ஒப்புக்கொள்ள நானொருசொல் இனி உண்மைதனை உரைசெய்கின்றேன் செப்பரிய ஸ்தலத்திருந்து தந்தை செய்தவத்தால்வந்துதித்த தப்பிலாதமாப்பிள்ளையின்செய்தி சபைதனிலே உரைசெய்கிறேன்.

(முடுகு) தந்தைதாய்மனநோக நடக்கவே மாட்டான் தாரணியிலிவன்போல வுவமைசொல்லக்கூடா பூமிகளதிர்ந்திட நடவாதமன்னன் புண்ணியந்தருமமென்றென்னலாஞ்சொன்னேன் பொய்சொல்லு வோர்களை வாயைக் கிழிப்பான் பொல்லாதபேர்களை வல்லமை யழிப்பான் புத்தியில் மிகுந்தனே வித்தைக்குநிகரார் பூதலத்தொருவரைப் புகலவொண்ணாது தயவினில் மிகுந்தவன் தாட்டீகமுள்ளான் தனமிகவேயீந்தாலும் பொய்வார்த்தை சொல்லான் மேலானகாரியந் தனைத்தேடுவானே கருநாகச்சனிபோலே தலைமயிருமொத்து காணலாமேதங்கத் தகடுபோல்நெற்றி வேப்பிலைபோற் புருவத்தில் தமது வொக்கும்விளங்குங் கண்ணாடிதனைப்போல்கண்ணிரகும் எலுமிச்சம்பழம்போலே உருண்டதோர்கண்ணும் இயல்பானபொன்சிமிழ்நாசியென்னும்கட்டாணிமுத்துபோலிருக்கின்றபல்லும்கற்கண்டுசீனியைப்பழிக்குமிவர்சொ

ல்லும் கோவைக்கனிபோலிருக்கின்றவுதடும் கொஞ்சமு ம்வஞ்சகமெண்ணுதமனமும் மூங்கிலடையைப்போ லிரு க்கின்றகழுத்தும் முருந்தனிடமைமந்தனெனமாறனவழு த்தும் தங்கத்தின்பலகைபோல் விரிந்ததோர்மார்பும்சரி யாகத்தருமன்போலிருக்கின்றசார்பும் மந்திரகிரிபோலச் சந்திரபுஜமும் மங்கையர்கண்டாலே தங்கள்கைவசமாம் அழகினில்மன்மதன்தசரதபாலன் அமைந்தாரே பெண் ணேசேனுனக்கேற்றசிலன் தாய்தந்தைசெய்ததோர்தவ மரியதாலும் தப்பாமலிக்கணவன் வாய்த்ததுபோலும் மணவாளன்வாய்த்தது மாதேவனதிஷ்ட மங்கையே வா ய்த்தது வுன்தாயதிஷ்டம் இந்ததோர்மருமகனுல் சம்மந் திகளு ஈரேழுதலைமுறையும் சுகமாச்சுநாளும் குணமாக யானுமே சொல்வதே வாக்கியம் கோதை வுண்டாச்சு உனக்கு வெகுபாக்கியம் ஏலேலோ ஏலலோ.

(மைத்துனிமார் அத்தானை யேசுதல்.)

சாமராகம்-அடதாளம்.

அததானவர்க்கெங்கள் அக்காளாலல்லவோ
அதியோகமுண்டாச்சுதே காப்புமாச்சுதேகைவீசுதே
நித்தியம்நல்லஇஸ்த்ரிசொக்காய்கள்முற்றுதேமுற்றுதே.

கற்றுழைநாற்ற மணக்கின்றமேனிக்குக்
கதம்பம்பூசலாச்சே நாற்றம்போச்சே மணமாச்சே
உற்றகாலுக்குச்சித்திரசோடும் பெற்றதேபெற்றதே.

குடலோடொட்டிய வயரிப்போபுட்டுக்
கூடைபோலாச்சே வாட்டம்போச்சே தேட்டமாச்சே
வடையுடன்போளிதடையிலா துண்ணவாச்சுதேவாச்சு

திண்ணைத் தூங்கியென்று பேரெடுத்தோர்க்கின்று
திண்டுதிமாசாச்சே கட்டிலாச்சே சோபாவாச்சே
பண்ணுடனேவாய்வண்டி பிடிலோடும்பாடுதேபாடு

நாட்டுப்புரத்தினில் மாட்டைமேய்த்திருந்த
நாள்களெல்லாம்போச்சே பல்லக்காச்சேசாரட்டாச்சே
வாட்டமாங்காசிப்பேட்டு துப்பட்டாவாச்சுதே வாச்சு

வாத்திபார்க்கிய வழியில்லாதவர்க்கு
கூத்தியாருண்டாச்சே குடையாச்சே நடையாச்சே
தோத்திரங்களும்சாஸ்திரங்களுந் தோன்றுதேதோன்

வண்டியோட்டிப் பிழைத்தபிழைப்பும்போய்
வாகனமுண்டாச்சே ஒயிலாச்சே சொகுசாச்சே
திண்டுமேற்சார்ந்துகொண்டிருக்கவுந் தேடுதேதேடுதே

நெற்றியிலொன்று மிடாதிருந்தவர்க்கு
கஸ்தூரிப்பொட்டாச்சே முருகாச்சேதிருநாச்சே
சுத்தமாகியமுத்துகண்டியுந் தொங்குதேதொங்குதே.

கஞ்சித்தொட்டியிற்போய் கஞ்சிகுடித்த
அக்காலமெல்லாம்போச்சே தனமாச்சே கனமாச்சே
பஞ்சிடும்புஷ்பமஞ்சமேற்றுயில் மிஞ்சுதேமிஞ்சுதே

(நாத்தினிமார் அண்ணியாரை யேசுதல்.)

தரு-காம்போதிராகம்-ஆதிதாளம்-பல்லவி.

அண்ணனுலல்லவோ வந்தது இந்தயோகம்
எங்கள் அழகான அண்ணியர்க்கு
ஆர்க்குந்தானுண்டு பாருங்கள் இந்தபோகம்

சரணங்கள்.

வண்ணாத்தியுடுப்பும்போச்சு வர்ணபட்டுசேலையாச்சு
திண்ணை தூங்குங் காலம்போச்சு சிறப்பாச்சு
பிண்ணாக்கு தின்னதும்போச்சுபேணிலட்டுவாஆச்சு
மண்ணிவிறந்ததும்போச்சு வட்டிக்குகொடுக்கலாச்சு அ

கப்பறையொளித்துபோச்சேகனவெள்ளிகிண்ணியாச்சு
செப்பியகருப்புடம்பு செகப்பாச்சு
கப்படித்தகாலம்போச்சி கஸ்தூரிபூசலாச்சு [ச்சு
செப்புமோ திரங்கள்போச்சி செம்பொற்கணை யாழியா

பூறப்பாய்படுக்கைபோச்சி புட்பசயனமாச்சு
கீறைவிற்றகாலம்போச்சி கெர்வமதிகமாச்சு
கிறைமணிபதக்கம்போய் கெம்பட்டிகைபூணலாச்சு
நாரவாயினுக்குஏலம் லவுங்கந்தாம்பூலமாச்சே அ

சாணியெடுத்தகாலம்போச்சி தங்ககாப்புகொலுசுமாச்சு
வாணிச்சிபிண்ணாக்குப்போச்சு வடையாச்சு

கோணிதைத்தகாலம்போச்சு குடுத்னிபாவாடையாச்சு
மூணுநாள்பட்டினிபோச்சு முப்பழுஞ்சக்கரையாச்சு அ

நடவுநட்டகாலம்போச்சு நகைநட்டுமதிகமாச்சு
குடலோடொட்டியவர் கோணியாச்சு
செடிசுற்றியகாலம்போச்சு தெருவெட்டிப்பார்க்கலாச்சு
படியுழக்குப்பேணும்போச்சு பந்துசெண்டாடலாச்சு அ

ஒட்டைக்கால்நடையும்போச்சு ஒயிலன்னநடையாச்சு
தண்டைச்சுருள்கொலுசு தானாச்சு
கொண்டைதிருகுடன்முத்துகொப்புமயிர்மாட்டியாச்சு
விண்டிலங்குசூரியன்போல் மின்னுஞ்சடப்பில்லையாச்சு

---

மூக்கில்நாழிகழுத்திற்கு மோராமாலைபூணலாச்சு
பாங்குடன்கம்மல் கத்திரிப்பாவலாச்சு
பாங்கியர்களென்னேரமும் பக்கத்திலிருந்துகொண்டு
தாம்பூலமடித்துத் தயவாய்கொடுக்கலாச்சு அண்

தங்கரத்னவளையலாச்சு தாபிதாபாவாடைக்குமேல்
சுங்குவிட்டகாசி துப்டாசொகுசாச்சு
ரங்குமிகமிஞ்சிபோச்சு நாணயங்கைவீசலாச்சு
பொங்கும்விரல்கட்குரத்னப் புதுமோதிரங்களாச்சி. அ

திருமணவோடம்-முற்றிற்று.

---